IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.74/2024

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | MURUGAVEL |
| FATHER'S NAME | : | MUNISAMY |
| VILLAGE | : | MELPATTI |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of March 2026.

<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது மேல்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022ஆம் வருடம் மேற்படி மேல்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சத்யமூர்த்தி அவர்கள் பணி செய்த விவரம் எனக்கு தெரியும். அவருடன் பணியாற்றிய அனுபவம் உள்ளதாலும் அவரது கையொப்பம் எனக்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 21.10.2022 ஆம் தேதி 19.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சத்யமூர்த்தி அவர்கள் மேல்பட்டி நிலைய பொறுப்பில் இருந்தபோது ஹரிபாபு, த/பெ.செங்காரெட்டி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக் கேற்ப நிலைய குற்ற எண்.198/2022, சட்ட பிரிவுகள் 454, 380 இ.த.ச. பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை ஆய்வாளர் திரு.ராஜன்பாபு அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

மறுநாள் 22.10.2022 காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் லோகநாதன் மற்றும் சுபாஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் செய்தார். பின்னர் சீனிவாசன் மற்றும் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தில் உருக்கிய நிலையில் தங்ககட்டி சுமார் 40 கிராம்–ஐ கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். பின்னர் சாட்சிகள் ஹரிபாபு, லதா, பிரியதர்ஷினி, தீபிகா, லோகநாதன், சுபாஷ், சீனிவாசன், குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார்.

பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் பேரில்

17.11.2022 அன்று காலை 10.30 மணிக்கு வடுகந்தாங்கல் பஸ்நிறுத்ததிடம் வாகனதணிக்கை செய்துகொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் முன்னுக்குபின் முரணாக பதில் அளித்தவரை விசாரணை செய்ததில் இவ்வழக்கிலும், வேறோரு வழக்கிலும் ஈடுபட்டது தெரியவந்ததால் காலை 08.15 மணிக்கு கைது செய்து மேற்கொண்டு விசாரணை செய்தபோது எதிரி பிரசாந்த் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 08.15 மணி முதல் 09.15 வரை சாட்சிகள் சீனிவாசன் மற்றும் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தார். கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 95–ன் மூலம் முறைப்படுத்தி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் காவல் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும், உருக்கிய நிலையில் தங்ககட்டி ஒன்று எடை சுமார் 40 கிராம் புகைப்படம் வாயிலாக சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இந்த வழக்கு பற்றி நேரடியாக நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொய்யான புகார் அளித்து வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.